கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வட மாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Kanniya Road, Varothaya Nagar, Trincomalee

Our Ref:- NP/15/MA/Gen-08 Your Ref:- 22 December 2009

சுற்றறிக்கை இல:- **05/2009**

சகல ப.நோ.கூ.சங்கங்களின் தலைவர்களுக்கும்.

## பொருட் கொள்வனவு

சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் தமக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல் தொடர்பில் பின்வரும் நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.

1. ப.நோ.கூ.சங்கம் ஒன்றில் சகல கொள்வனவுகள் தொடர்பாகவும் உபசபை ஒன்று இருத்தல் வேண்டும். இவ்வுபசபையின் சிபார்சுக்கமைய நெறியாளர் குழுத் தீர்மானங்களை மேற்கொண்டு கொள்வனவுகளை அனுமதிக்கலாம். தனிநபர் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். தேவையான பொருட்களை 23, 23A படிவங்கள் மூலம் அறிந்து முன்கூட்டியே தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். இது கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். விற்பனை சுழற்சியுள்ள பொருட்களை உத்தமமட்டத்தில் கொள்வனவு செய்து இருப்பில் வைத்திருப்பதை கவனத்தில் கொள்ளல்வேண்டும்.

2. தற்போது A9 பாதை திறக்கப்பட்டுள்ளதால் சகல ப.நோ.கூ.சங்கங்களும் தமக்குத் தேவையான பொருட்களை கொழும்பில் நேரடியாக கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்வேண்டும். இவ்வாறு கொள்வனவு செய்வதற்கு முன்பு கூறுவிலைகள் பெறப்படல் வேண்டும். பெறப்பட்ட கூறுவிலைகளின் அடிப்படையில் பொருட்களின் தரம், விலை, தேவை என்பன ஆராயப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். கொழும்பில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு நியாயமான விலையில் நுகர்வோருக்கு பொருட்கள் கிடைப்பதை உறுதிசெய்வதுடன், தரமான பொருட்களாக இருப்பதையும் உறுதிசெய்தல் வேண்டும். தொடர்ந்து ஒரு தனியார் ஸ்தாபனத்திலேயே கொள்வனவு செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். மேலும் தங்கள் மாவட்டத்தில் நிலவும் மொத்த ரீதியான கொள்விலையைவிட கொழும்பு கொள்வனவு விலை இழிவளவிலும் தரமானதாகவும் இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

3. உள்ளூரில் தனியார் நிறுவனங்களில் கடன் அடிப்படையில் கூடிய விலையில் பொருட்கள் கொள்வனவு செய்வது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். சகல ப.நோ.கூ.சங்கங்களும் தனியாருடன் போட்டியிடத்தக்கவகையில் தரமான பொருட்கொள்வனவை மேற்கொள்ளுதல் அவசியமானதாகும்.

☏-CCD & RCS – 060 2264646 Gen – 060 2264645 Fax – 026 2226951/4/6/7 – Ext - 244
E- mail :- ccdnp@mail.com

CS CamScanner

4. சங்கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபட்டிருந்தால், அரிசி ஆலை இருக்கும் சங்கங்கள் அவற்றினை அரிசியாக்கி தமது விற்பனை நிலையங்கள் மூலம் சந்தைப்படுத்துவதுடன், மிகையானவற்றை ஏனைய ப.நோ.கூ.சங்கங்களுக்கும் நியாய விலையில் சந்தைப்படுத்தலாம். அரிசி அரைக்கும் இயந்திர வசதி உள்ள சங்கங்கள் அரிசியை மாவாக்கி, பொதியிட்டு அவற்றை நியாய விலையில் தமது விற்பனை நிலையங்கள் மூலம் சந்தைப்படுத்துவதுடன், மிகையானவற்றை ஏனைய சங்கங்களுக்கு சந்தைப்படுத்துவதன் மூலமும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்கப்படுத்த முடியும். இதேபோல் ஏனைய உள்ளூர் உற்பத்தி பொருட்களினையும் பதப்படுத்தி விற்பனை செய்யமுடியும்.

5. உள்ளூர் உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்து அவற்றை கொழும்பிலோ அல்லது ஏனைய இடங்களிலோ சந்தைப்படுத்தும்போது சங்கத்திற்கு தேவையான ஏனைய நுகர்வுப் பொருட்களை அவ்விடங்களிலிருந்து கொள்வனவு செய்வதன்மூலம் போக்குவரத்துச் செலவினங்களை கட்டுப்படுத்தி பொருட்களை நியாய விலைக்கு நுகர்வோருக்கு வழங்க முடியும்.

6. உள்ளூரில் அரிசி கொள்வனவு செய்வதாயின் நெல் குற்றும் அரிசி ஆலை உரிமையாளர் களிடமிருந்து கேள்விப்பத்திர முறைமூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பெறப்பட்ட கூறுவிலைகளின் அடிப்படையில் விலை, தரம் என்பன அவதானிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்படல் வேண்டும். இந்நடைமுறையின்போது பக்கச்சார்பான தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளலாகாது.

7. சங்கத்தின் வர்த்தக முகாமையாளர் அல்லது கொள்வனவில் ஈடுபடுவோர் நெறியாளர் குழுத் தீர்மானங்களுக்கமைவாகவும், பொதுமுகாமையாளரின் கண்காணிப்பின்கீழும் சங்கத்தின் ஆதாயத்தை குறிக்கோளாக கொண்டும் கொள்வனவில் ஈடுபடுதல் வேண்டும்.

8. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பாரவூர்தி மூலம் அனுப்பிவைக்கப்படும்போது படிவம் 25 தயாரிக்கப்பட்டு சாரதியிடம் ஒப்படைத்தல் வேண்டும். இப்பொருட்கள் களஞ்சியத்துக்கு கொண்டுவரப்பட்டதும் பொருட்கள் யாவும் அளந்தும், நிறுத்தும், எண்ணியும் களஞ்சியப் பொறுப்பாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும். அலகு ரீதியாகவும், பெறுமதி ரீதியாகவும் சரிவர பொறுப்பேற்றமையை உறுதிப்படுத்திக்கொள்வது களஞ்சியப் பொறுப்பாளரின் கட்டாய கடமையாகும்.

ஆ.சுப்பிரமணியசர்மா, o/c
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வ.மா.)

பிரதி: 1) செயலாளர், உள்ளூராட்சி, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு கூட்டுறவு, கிராம அபிவிருத்தி அமைச்சு, வடமாகாணம் - தகவலுக்காக.

2) கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம் / கிளிநொச்சி / முல்லைத்தீவு / மன்னார் / வவுனியா
- தகவலுக்காகவும், கொள்வனவு நடைமுறைகள் சரியாக பின்பற்றப்படுதலை கண்காணிப்பதற்கும்.



CamScanner